அடையாள இலக்கம்

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2012

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition - Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## பகுதி 1 & பகுதி 2

அதிமேற்பிரிவு
(12-14 வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞயிற்றுக்கிழமை

நேரம் : 2:00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப்புள்ளிகள் | |

# அதிமேற்பிரிவு - பகுதி 1

**(1) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**

(5 புள்ளிகள்)

1. பழிச்சொல் ____________ + ____________
2. மொழிப்பாடம் ____________ + ____________
3. விண்ணுலகு ____________ + ____________
4. பூவெடு ____________ + ____________
5. ஆற்றோரம் ____________ + ____________

| புள்ளிகள் | |
|---|---|

**(2) கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக**

(5 புள்ளிகள்)

1. மறதி ____________
2. வளர்பிறை ____________
3. வென்றான் ____________
4. தொடக்கம் ____________
5. ஏழை ____________

| புள்ளிகள் | |
|---|---|

**(3) கீழே தரப்பட்ட வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.**

(10புள்ளிகள்)

1. சமூக மன்றம் நடத்திய போட்டியில் நான் வரைந்த ____________________ பரிசு கிடைத்தது.

2. தாய் தன் குழந்தையைக் கண்ணின் இமை போல் ____________________ வந்தாள்.

3. சுகாதாரமற்ற முறையில் உணவு விற்ற அங்காடி வியாபாரி ஒருவர் தம் ________________________ இழந்தார்.

4. மின்விசிறி வேகமாக __________________ ஆசிரியரின் மேசையிலிருந்து தாள்கள் பறந்தன.

5. இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் கேட்டுப் போராடிய காந்தியடிகள் ஆங்கிலேயரால் சிறையில் _______________________

6. எந்தவொரு நிகழ்ச்சிக்கும் நாம் ___________________ செல்வது ஒரு நல்ல பழக்கம்.

7. நற் செயல் புரிந்த தம் மாணவனை ஆசிரியர் __________________________

8. உடலின் மிக முக்கியமான ______________________ இதயமும் ஒன்று.

9. தற்போது இணையம்வழி கலைகளைப் பற்றிய ______________________________ பெற்றுக்கொள்ளலாம்.

10. காற்பந்துப் போட்டியைக் காண மக்கள் வெள்ளம் போல் _______________

| | |
|---|---|
| புள்ளிகள் | |

**(4) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் கொண்டு அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைத்து எழுதுக.**

(20புள்ளிகள்)

1. வேலை

______________________________

2. வேளை

______________________________

3. ஆனி

______________________________

4. ஆணி

______________________________

5. குரை

______________________________

6. குறை

______________________________

7. அலகு

______________________________

8. அழகு

______________________________

9. வால்

______________________________

10. வாள்

______________________________

| | |
|---|---|
| புள்ளிகள் | |

(5) **கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான <u>ஒத்த கருத்துள்ள</u> சொல்லை அடையாளம் கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.**

(10புள்ளிகள்)

1. மாணவரின் முன்னேற்றத்தை அறிந்து ஆசிரியரின் உள்ளம் <u>உவகையால்</u> மலர்ந்தது.
   1). களிப்பால் 2). கருணையால் 3). புகழால் 4). வியப்பால்

   ________________________

2. கோவில் மேலாண்மைக் குழுவினர் பொதுமக்களிடமிருந்து <u>திரட்டிய</u> நிதிப்பணத்தில் கோவில் திருப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றினர்.
   1). தொகுத்த 2). சேர்த்த 3). ஈட்டிய 4). குவித்த

   ________________________

3. ஒரு நாட்டின் வளத்திற்கு நாட்டு நலனில் <u>அக்கறை</u> காட்டும் மக்களே பெரிதும் காரணமாக இருக்கிறார்கள்.
   1). அன்பு 2). ஆர்வம் 3). ஆதரவு 4). உணர்ச்சி

   ________________________

4. குமரனின் பெற்றோர் அவன் சுற்றுலா செல்வதற்கு <u>இசைந்தனர்</u>.
   1). மறுத்தனர் 2). தயங்கினர் 3). கண்டித்தனர் 4). இணங்கினர்

   ________________________

5. வாசுகி எழுதிய கட்டுரையில் பிழைகள் <u>மலிந்து</u> காணப்பட்டன.
   1). குறைவாக 2). தெளிவாக 3). ஏராளமாக 4). மறைவாக

   ________________________

6. எவ்வளவுதான் படித்தபோதிலும் ஒருவருக்குச் சிறப்பை அளிப்பது அவரது நல்ல <u>இயல்பும்</u> நற் செயலுமேயாகும்.
   1). ஒழுக்கமும் 2). தன்மையும் 3). எண்ணமும் 4). பழக்கமும்

   ________________________

7. அவுஸ்திரேலியாவில் முதியவர்களைப் பேணுவதற்குப் பல இல்லங்கள் உள்ளன.

1). நல்வழிப்படுத்துவதற்கு
2). குணப்படுத்துவதற்கு
3). பாதுகாப்பதற்கு
4). நிதிவழங்குவதற்கு

______________________________

8. இரசிகர்கள் இசை வல்லுனரின் இன்னிசையில் ஒன்றிப்போய் மெய்ம் மறந்திருந்தனர்.

1). ஈடுபட்டு 2). ஆர்வம் கொண்டு 3). மனம் உருகி 4). இரசித்து

______________________________

9. ஆசிரியர்கள் பலர் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகத் தங்கள் ஓய்வு நேரத்தையும் அர்ப்பணித்து வருகின்றனர்.

1). தியாகம் செய்து 2). பயன்படுத்தி 3). ஒதுக்கி 4). செலவிட்டு

______________________________

10. நாம் ஈடுபட்ட செயலில் வெற்றியைச் சாதிக்கும் வரை எத்தகைய இடர்கள் வரினும் தளர்தல் கூடாது.

1). இழப்புகள் 2). துன்பங்கள் 3). நோய்கள் 4). தோல்விகள்

______________________________

| புள்ளிகள் | |
|---|---|

## அதிமேற்பிரிவு - பகுதி 2

**(6) பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக**:

(5x4= 20புள்ளிகள்)

ஓர் இனத்தின் உயர்வை அளவிட அளவுகோலாக இருப்பவை அந்த இனத்தின் நாகரிகமும் பண்பாடும் ஆகும். சிலர் நாகரிகமும் பண்பாடும் ஒன்றே என மயங்குகின்றனர். அகத் தேவைகளை ஒட்டிய பழக்கங்களும் உணர்வுகளும் பண்பாடு ஆகும். அது மனித இனத்திற்குத் தேவையானதும் நிலையானதுமாகும். மரபுநிலை கெடாமல் மக்கள் போற்றிப் பாதுகாப்பது பண்பாடு. அது பெரும்பாலும் சொல்லாலும் செயலாலுமே வெளிப்படக் கூடியது. புறத்தோற்றத்தால் இன்று நாம் போற்றும் நாகரிகத்தினின்றும் பண்பாடு பெரிதும் வேறுபட்டது. நாகரிகம் என்பது புறத் தேவைகளில் ஏற்படும் வளர்ச்சி. அது ஒரு சமுதாயத்தின் உணவு, உடை, கலை, அரசியல், போன்றவற்றில் வெளிப்படுகிறது. அதனை மனித சமுதாயத்தின் வாழ்வியல் முறைகளைக் காட்டும் கண்ணாடி என்றும் கூறலாம்; ஒரு சமுதாயத்தின் வரலாற்று நூல் என்று கூறினும் அது மிகையாகாது.

இவ்வுலகம் தோன்றியது முதல் இதுவரை எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மறைந்துவிட்டன. ஓர் இனத்தார் தங்கள் மீது மற்றோர் இனத்தார் இழைக்கும் கொடுமைகளை எதிர்த்துப் புரட்சி செய்து, அதன்பின் அவர்களை வென்று தங்களின் நாகரிகத்தை நிலை நிறுத்துகின்றனர். அவர்களின் வெற்றி கூட நெடுங்காலம் நீடித்து நிலைப்பதில்லை. பின்னர் வேறோர் இனத்தார் தோன்றி அவர்களை அழித்துத் தங்கள் நாகரிகத்தைப் புகுத்துகின்றனர். இவ்வாறு ஒரு புதிய நாகரிகம் அப்பகுதியில் தோன்றுகிறது. எனவே, “நாகரிகம் என்பது மனித இனங்களுக்கிடையே நிகழும் போராட்டங்களிலிருந்து பிறந்து வளர்வது” என்று அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். போராட்டங்களின் விளைவால் புதியன தோன்றுகின்றன; பழையன மறைகின்றன

.(அடுத்த பக்கம் பார்க்க)

ஒரு நாகரிகம் அழிவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. ஒன்று வெளியார் படையெடுப்பு. மற்றொன்று, உள்நாட்டிலேயே புதிய நாகரிகம் தோன்றி அங்கு இருக்கும் ஒன்றினை அழிப்பது. சில வேலைகளில் இயற்கையின் சீற்றத்திற்கு ஒரு நாடு ஆளாகக் கூடும். அப்போது அந்நாடும் அது வளர்த்த நாகரிகமும் இருந்த இடம் தெரியாமல் போய்விடுவதும் உண்டு. ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாய்த் திகழ்ந்த பெருவியன் (Peruvian) நாகரிகம் ஸ்பானியர்களின் படையெடுப்பால் சிறு அடையாளம் கூட இன்றி வேரோடு கிள்ளி எறியப்பட்டது. உள்நாட்டில் ஒரு புதிய நாகரிகம் தோன்றி அங்கு நிலவி வந்த நாகரிகத்தை வீழ்த்தியதற்குச் சிறந்த சான்றாக ரோமானியப் பேரரசில் கிறிஸ்துவ நாகரிகம் தலைதூக்கியதைக் காணலாம்.

சில வேளைகளில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது படையெடுத்து அதனை வெற்றி கொள்கிறது. அப்போது வீழ்ச்சியுற்ற நாட்டின் நாகரிகம் மேலானதாக இருப்பின், வென்ற நாடு அந்நாகரிகத்தை முற்றாகத் தனதுடைமை ஆக்கிக் கொள்வதும் உண்டு. ரோமானியர்கள் கிரேக்கர்களை வென்றபோது அவர்கள் கிரேக்க நாகரிகத்தை தங்களுடையதாக ஆக்கிக் கொண்டனர். இதனால், ரோமானிய நாகரிகம் வளம் பெற்றதே ஒழியச் சிறிதும் அதன் தனித்தன்மையை இழக்கவில்லை.

1. நாகரிகமும் பண்பாடும் நமக்கு எதனை உணர்த்துகின்றன?

   ______________________________

2. கட்டுரையாசிரியர் கூற்றுப்படி எது சமுதாயத்தின் வரலாற்று நூல் ?

   ______________________________

3. ஆட்சி மாற்றம் எத்தகைய விளைவை ஏற்படுத்துகிறது ?

   ______________________________

   ______________________________

4. பெருவியன் நாகரிகத்தின் அழிவு எதற்குச் சான்றாய்க் கூறப் படுகிறது ?

---

5. “அப்போது வீழ்ச்சியுற்ற நாட்டின் நாகரிகம் மேலானதாக இருப்பின், வென்ற நாடு அந்நாகரிகத்தை முற்றாகத் தனதுடைமை ஆக்கிக் கொள்வதும் உண்டு” இவ்வாக்கியத்தில் “தனதுடைமை ஆக்கிக் கொள்வதும்” என்னும் தொடர் எதனை உணர்த்துகிறது?

---

---

| புள்ளிகள் | |
|---|---|

**(7) கீழே தரப்பட்டுள்ளவற்றில் ஒரு தலையங்கத்தைத் தேர்ந்தெடுத்து 200 சொற்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை / கடிதம் எழுதுக .**

(30புள்ளிகள் )

1. அண்மையில் நீ உன் பள்ளி மாணவர்களுடன் முதியோர் இல்லம் ஒன்றிற்குச் சமூகசேவை செய்வதற்குச் சென்றிருந்தாய், அங்கு உனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், உணர்வுகளையும் குறித்து நீ உன் நண்பருக்கு எழுதும் ஒரு கடிதம்.

2. ஒருவருடைய தாய்மொழி அறிவு அவரது வாழ்வைச் செம்மைப் படுத்தப் பெரிதும் உதவுகிறது.

3. தொலைக்காட்சியில் நீர் பார்த்த ஒரு நிகழ்ச்சி தொடர்பாக உமது கருத்துக்கள் உணர்வுகளை உள்ளடக்கி ஒரு மதிப்பீட்டுக் கட்டுரை எழுதுக.

4. எதிர்வரும் 2050 ஆம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும் என்பது தொடர்பாகக் கற்பனையையும், ஊடகத்தையும் உள்ளடக்கி ஒரு கட்டுரை எழுதுக.